STC.No129/2026 PW1.திரு.பாலசுப்ரமணியம்

தேதி– 11.08.2026

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். காசோலையை யார் கொடுத்ததாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சிவகுமார் கொடுத்தார். எதிரி எதன் அடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் நீலகிரி மாவட்டத்தில் தொழில் செய்யும் அடிப்படையில் எதிரியை எனக்கு தெரியும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ஸ்பைஸ்சிஸ் தொழில் செய்கிறேன்.எனது தொழில் மூலம் மாதம் எனக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் 75 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை வருமானம் வரும். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனது தொழில் மூலம் வரும் வருமானம் வங்கி மூலம்தான் வரும் என்றால் இல்லை. நான் ஊட்டியில் எங்கு குடியிருந்தேன் என்றால் கே.பி காம்பளக்ஸ், குன்னூர் மெயின்ரோடு, ஓட்டல் புளூ பேர்டு எதிரில் ஊட்டியில் குடியிருந்தேன். மேற்படி விலாசத்தில் எத்தனை வருடமாக குடி இருந்தேன் என்றால் 10 வருடமாக குடி இருந்தேன். மேற்படி விலாசமானது சொந்த வீடா அல்லது வாடகை வீடா என்றால் வாடகை வீடு. அதற்கான வாடகை ஒப்பந்தம் தாக்கல் செய்ய தயாரா என்றால் ஒப்பந்தம் போடவில்லை.

2. எனக்கு சொந்த ஊர் போடிநாயக்கனூர் என்றால் சரிதான். எதிரியை எப்போது முதல் முதலில் பார்த்தேன் என்றால் ஊட்டியில் வைத்து எனது நண்பர் இளங்கோவன் மூலம் பார்த்தேன். எதிரி எங்கு வைத்து பணம் வாங்கினார் என்றால் போடிநாயக்கனூரில் உள்ள எனது வீட்டில் வைத்து பணம் வாங்கினார். எதிரிக்கு எனது வீடு தெரியாது என்றும், எதிரி என்னிடம் காசோலை தொகை வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி குடும்ப நண்பரா என்றால் குடும்ப பழக்கம், அவரது மனைவி பெயர் தமயந்தி, மகள் பெயர் சங்கவி, மருமகன் ஜனார்த் ஆகும். நான் புகார் மனுவில் கூறியுள்ள முகவரியில் எதிரி குடியிருக்கிறார் என்றால் சரிதான், பெங்களூர் உள்ள அவரது மகள் வீட்டிலும் அவ்வப்போது தங்குவார். எதிரியை எப்போது

கடைசியாக பார்த்தேன் என்றால் ஆறு மாதத்திற்கு முன்பு பார்த்தேன். ஊட்டி ஸ்டேட் பாங்க் முன்னிலையில் வைத்து எதிரியை பார்த்தேன், தேதி ஞாபகம் இல்லை. எதிரிக்கு கடைசியாக எப்போது போன் செய்தேன் என்றால் ஆறு மாதத்திற்கு முன்பு போன் செய்தேன், எதிரியின் மனைவி மற்றும் மகள் செல்போன் நம்பருக்கும் போன் செய்வேன், ஆனால் எதிரி எடுக்கமாட்டார். எதிரி எனக்கு குடும்ப நண்பர் இல்லை என்றும், நான் ஊட்டியில் வட்டிக்கு பணம் கொடுக்கும் பைனான்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறேன் என்றும், அரசு வேலை செய்யும் நபர்களுக்கு மட்டும் காசோலையை பெற்று பணம் கொடுப்பேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்பு எதிரி என்னிடம் பணம் வாங்கி உள்ளாரா என்றால் அவ்வப்போது பணம் வாங்கி திரும்பிக் கொடுப்பார். எவ்வளவு தொகை இதற்கு முன்பு வாங்குவார் என்றால் 50 ஆயிரம், ஒரு லட்சம் வரை பெரிய தொகை பெற்று திருப்பி செலுத்துவார். மேற்படி தொகைகளுக்கு நான் காசோலை பெறுவேன் என்றால் இல்லை நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன்.

3. எதிரி பத்து வருடத்திற்கு முன்பு என்னிடம் இரண்டு லட்சம் கடன் வாங்கினார் என்றும், அதை திருப்பி செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. மேற்படித் தொகைக்கு பாலாஜி பைனான்ஸ் என்ற ரசீதில் நான் கையொப்பம் செய்து எதிரியிடம் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எதிரிக்கு 9 லட்சத்தை ஒரு ரூபாய் வட்டிக்கு கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான். எதிரி முறையாக வட்டி கொடுத்தாரா என்றால் இல்லை, நான்கு மாதம் மட்டும் கொடுத்தார். எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் 09.11.2025 தேதியன்று பணம் கொடுத்தேன். அதற்கு ஆதரவாக எத்தனை காசோலைகள் வாங்கினேன் என்றால் ஒரு காசோலை மட்டும் வாங்கினேன்,வேறு ஆவணங்கள் வாங்கவில்லை. காசோலையின் நிறம் என்னவென்றால் வெள்ளையும், நீலம் நிறமும் கொண்ட காசோலையாகும். எதிரி நிரப்பப்படாத காசோலையை கொடுத்தார் என்றால் இல்லை, காசோலையை ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து கொடுத்தார்.

4. எதிரி தமிழில் கையொப்பம் செய்தாரா அல்லது ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தாரா என்றால் ஞாபகம் இல்லை. என்ன நிறத்தில் காசோலையை பூர்த்தி செய்தார் என்றால் நீல நிறத்தில் பூர்த்தி செய்தார்.பால்பாயிண்ட் பேனாவில் பூர்த்தி செய்து கொடுத்தார். எதிரி பத்து வருடத்திற்கு முன்பு என்னிடம் வாங்கிய கடனுக்கு மூன்று காசோலைகள்

கொடுத்தார் என்றும், நான் இவ்வழக்கில் கூறிய தேதியன்று எதிரி காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காசோலையை நான் சமீபத்தில் வாங்கி இருந்தால் காசோலையில் உள்ள கையொப்பம் குறித்து எனக்கு ஞாபகம் இருந்திருக்கும் என்றும், பத்து வருடத்திற்கு முன்பு நான் காசோலையை வாங்கியதால் தான் எதிரியின் கையொப்பம் எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ராஜாங்கம் என்ற நண்பர் உள்ளாரா என்றால் இல்லை. சிவாஜி என்பவர் மீது STC 66/2024ல் ரூ.7 லட்சத்திற்காக தேனி, விரைவு நீதிமன்றத்தில் எனது நண்பர் ராஜாங்கம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. STC 72/2024 மெர்சி என்ற ஆசிரியர் மீது தேனி, விரைவு நீதிமன்றத்தில் எனது நண்பர் ராஜாங்கம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. இந்நீதிமன்றத்தில் STC 120/2026 சாம்சன் என்பவர் மீது எனது நண்பர் ராஜாங்கம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. ராஜாங்கம் என்பவருக்கும், எனக்கும் தொழில் ரீதியாக பங்குதாரர் என்ற உறவுமுறை உள்ளது என்றால் சரியல்ல. நீலகிரி மாவட்டம் கண்காணிப்பாளரிடம் மேற்படி சிவாஜி, மெர்சி, முரளி, சின்னச்சாமி மற்றும் சாம்சன் ஆகியோர்கள் என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் கொடுத்தார்கள். எனது வழக்கறிஞருடன் சென்று அந்த புகார் பொய் புகார் என்று நிரூபணம் செய்துவிட்டேன். மேற்படி புகாரானது தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.11 15:27:57 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam